# வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும்

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

**08**

## தரம் 10

## காசேடும் சில்லறைக் காசேடும்

Commerce and Business Studies Bra

(1) காசு விற்பனை ரூ.10 000. இதனைப் பதிவதற்கான மூல ஆவணம் மற்றும் மூல ஏடுகளை முறையே காட்டும் விடை,

(1) காசு கணக்கு மற்றும் பற்றுச் சீட்டு
(2) பற்றுச் சீட்டு மற்றும் காசுக் கணக்கு
(3) காசுக் கணக்கு மற்றும் கொடுப்பணவு கைச்சாத்து
(4) விற்பனை நாளேடு மற்றும் காசுக்கணக்கு

(2) ரூ. 50 000 பெறுமதியான நடைமுறை சொத்து கொள்வனவை பதிவதற்கான மூல ஆவணம் மற்றும் மூல ஏடுகளை ஒழுங்கு முறையே காட்டும் விடை

(1) காசுக் கணக்கு மற்றும் பற்றுச் சீட்டு
(2) பற்றுச் சீட்டு மற்றும் காசுக் கணக்கு
(3) கொடுப்பணவு கைச்சாத்து மற்றும் காசுக்கணக்கு
(4) நாற்குறிப்பு கைச்சாத்து மற்றும் பொது நாட்குறிப்பு

(3) காசேட்டினால் நிறைவேற்றப்படும் இரட்டை தொழிற்பாடாக அமைவது,

(1) பேரேட்டுக் கணக்கு மற்றும் மூல ஆவணமாக தொழிற்படல்.
(2) முதற்பதிவேடு மற்றும் மூல ஆவணமாக தொழிற்படல்.
(3) பேரேட்டுக் கணக்கு மற்றும் முதற்பதிவேடாக தொழிற்படல்.
(4) நிதியறிக்கையாக மற்றும் மூல ஆவணமாக தொழிற்படல்.

(4) காசுக் கணக்கில் கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கு அடிப்படையாக அமையும் சரியான இரட்டைப் பதிவு தத்துவமாக அமைவது?

(1) சொத்து அதிகரித்தல் வரவு மற்றும் சொத்து குறைவு செலவு
(2) சொத்து குறைத்தல் வரவு மற்றும் சொத்து அதிகரித்தல் செலவு
(3) உரிமை அதிகரித்தல் வரவு மற்றும் உரிமை குறைவு செலுவு
(4) உரிமை குறைத்தல் வரவு மற்றும் உரிமை அதிகரித்தல் செலவு

(5) ரூ. 10 000 தளபாடங்கள் பழுதுபார்க்கும் செலவுகள் வரவு மற்றும் செலவு வைக்கப்படும் கணக்கு ஒழுங்கு முறையே காட்டும் விடை,

(1) காசுக்கணக்கு வரவு தளபாடங்கள் பழுது பார்க்கும் செலவு.
(2) தளபாடக் கணக்கு வரவு காசுக் கணக்கு செலவு
(3) தளபாட பழுது பார்த்தல் கணக்கு வரவு காசுக் கணக்கு செலவு
(4) காசுக் கணக்கு வரவு தளபாட கணக்கு செலவு

(6) கணக்கை சமப்படுத்துவது அவசியமாவது,

(1) கணக்கின் வரவு பக்கம் கூட்டுத்தொகையைப் பெற

(2) கணக்கின் செலவு பக்கம் கூட்டுத்தொகையைப் பெற

(3) கணக்கு மீதியை கண்டுகொள்வதற்காக

(4) சரியான இரட்டை பதிவு விதி பின்பற்றப்பட்டுள்ளதா என சரிபார்க்க

(7) ஒரு பொருளின் குறிக்கப்பட்ட விலையில் வழங்கப்படும் குறைவு.

(1) ஊக்கத்தொகை

(2) வியாபார கழிவாகும்

(3) காசு கழிவாகும்

(4) நன்கொடையாகும்

(8) வியாபார கழிவு

(1) கணக்கேடுகளில் பதியப்படுவதில்லை.

(2) கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(3) விற்பனைக் கணக்கில் பதிவு செய்யப்படும்.

(4) கொள்வனவு கணக்கில் பதிவு செய்யப்படும்.

(9) காசு கழிவு என்பதால் கருதப்படுவது.

(1) கடன்பட்டோர்களிடமிருந்து பணம் பெறப்படும் போது மட்டுமே.

(2) கடன்கொடுத்தோர்களுக்கு பணம் செலுத்தப்படும் சந்தர்ப்பங்களில் மட்டுமே.

(3) காசு கொள்வனவின் போது மட்டும்.

(4) கடன்பட்டோர்களிடமிருந்து பணம் பெறப்படும் போது , கடன்கொடுத்தோர்களுக்கு பணம் செலுத்தப்படும் சந்தர்ப்பங்களில் மட்டும்

(10) பெற்ற கழிவு , பெற்ற கழிவு கணக்கில் செலவு வைக்கப்படுவது.

(1) வருமானம் அதிகரித்தல் செலவு எனும் இரட்டைப் பதிவு விதியின்படி.

(2) செலவு குறைவடைதல் செலவு எனும் இரட்டைப் பதிவு விதியின்படி.

(3) பொறுப்பு அதிகரித்தல் செலவு எனும் இரட்டைப் பதிவு விதியின்படி.

(4) உரிமை அதிகரித்தல் செலவு எனும் இரட்டைப் பதிவு விதியின்படி.

Commerce and Business Studies Branch

(11) கொடுத்த கழிவு , கொடுத்த கழிவு கணக்கில் வரவு வைக்கப்படுவது.

(1) வருமானம் குறைவடைதல் வரவு எனும் இரட்டைப் பதிவு விதியின்படி.

(2) செலவு அதிகரித்தல் வரவு எனும் இரட்டைப் பதிவு விதியின்படி.

(3) பொறுப்பு குறைவடைதல் வரவு எனும் இரட்டைப் பதிவு விதியின்படி.

(4) உரிமை குறைவடைதல் வரவு எனும் இரட்டைப் பதிவு விதியின்படி.

(12) காசு கணக்கில் காணப்படும் கழிவு நிரல் மூலம் பூர்த்தி செய்யப்படுவது,

(1) கணக்கு செயல்பாடு மட்டும்.

(2) ஒரு ஞாபன நிரல் செயற்பாடு மட்டும்.

(3) ஒரு கணக்கு மற்றும் ஒரு ஞாபன நிரல் செயற்பாடு ஆகிய இரட்டை செயற்பாடு.

(4) மேற்கூறியவை எதுவும் நிறைவேற்றப்படாது.

(13) கொடுத்த கழிவுக்கான சரியான இரட்டை பதிவு:

(1) கொடுத்த கழிவு கணக்கு வரவு கடன் பட்டோர் கணக்கு செலவு

(2) கடன் கடன் பட்டோர் கணக்கு வரவு கொடுத்த கழிவு கணக்கு செலவு

(3) காசு கணக்கு வரவு, கொடுத்த கழிவு கணக்கு செலவு

4) கொடுத்த கழிவு கணக்கு வரவு, காசு கணக்கு செலவு

(14) பெற்ற கழிவுக்கான சரியான இரட்டை பதிவு:

(1) பெற்ற கழிவு கணக்கு வரவு கடன் கொடுத்தோர் கணக்கு செலவு

(2) கடன் கொடுத்தோர் கணக்கு வரவு கொடுத்த கழிவு கணக்கு செலவு

(3) காசு கணக்கு வரவு, பெற்ற கழிவு கணக்கு செலவு

(4) பெற்ற கழிவு கணக்கு வரவு, காசு கணக்கு செலவு

சியரட ஆடை வணிகத்தினால் ரூ.80000 பெறுமதியான ஆடைகள் வின்டி டெக்ஸ்டைல் நிறுவனத்திற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனைக்கான பட்டியலில் குறித்த கடனை 3 மாதங்களுக்கு செலுத்தினால் 10% கழிவு வழங்கப்படும் என நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. வின்டி டெக்ஸ்டைஸினால் குறித்த கடனானது 2 மாதங்களுக்குள் கடனைத் செலுத்தி தீர்த்தது.

(15) மேற்கூறிய சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவு, சியாரட்டா ஆடை வணிகத்திற்கு,

1. வியாபார கழிவுடன் தொடர்பாக வழங்கப்படும் கொடுத்த கழிவாகும்.

2. வியாபார கழிவுடன் தொடர்பாக வழங்கப்படும் பெற்ற கழிவாகும்.

3. காசு கழிவுடன் தொடர்பாக வழங்கப்படும் கொடுத்த கழிவாகும்.

4. காசு கழிவுடன் தொடர்பாக வழங்கப்படும் பெற்ற கழிவாகும்.

Commerce and Business Studies Branch

(16) மேற்கூறிய சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவு, வின்டி டெக்ஸ்டைல் வணிகத்திற்கு,

1. வியாபார கழிவுடன் தொடர்பாக வழங்கப்படும் கொடுத்த கழிவாகும்.
2. வியாபார கழிவுடன் தொடர்பாக வழங்கப்படும் பெற்ற கழிவாகும்.
3. காசு கழிவுடன் தொடர்பாக வழங்கப்படும் கொடுத்த கழிவாகும்
4. காசு கழிவுடன் தொடர்பாக வழங்கப்படும் பெற்ற கழிவாகும்.

(17) கழிவு தொடர்பான சரியான கூற்று என்ன?

1. பெற்ற கழிவு மற்றும் கொடுத்த கழிவு என்பன காசு கழிவில் மட்டுமே கிடைக்கும்.
2. வியாபார கழிவு மற்றும் காசு கழிவு ஆகிய இரண்டி கணக்குகளிலும் காணப்படும்.
3. காசு கழிவு என்பது ஒதுக்கப்பட்ட காலத்திற்குள் கடன் பட்டோரினால் பணம் செலுத்த படும் போது கடனில் இருந்து வழங்கப்படும் கழித்தல் ஆகும்.
4. கடனை விரைவாக பெற்றுக்கொள்வதற்காக கடன் பெற்றவரை ஊக்குவிக்க வழங்கப்படும் கழிவாகும்.

குறிக்கப்பட்ட விலை ரூ.50,000 பெறுமதியான பொருட்களை பாத்தியா கடனுக்கு வாங்கினார். அப்போது அவருக்கு 10% கழிவு கிடைத்தது. ஒரு மாதத்திற்குப் பணம் செலுத்திய போது 5% கழிவும் பெற்றார்.

(18) மேற்கண்ட சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபார கழிவின் பெறுமதி,

1. ரூ. 500
2. ரூ. 250
3. ரூ. 5 000
4. ரூ. 2 500

(19) மேற்கண்ட சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காசு கழிவின் பெறுமதி ,

1. ரூ. 2 500
2. ரூ. 2 250
3. ரூ. 4 750
4. ரூ. 5 000

(20) பாதியாவினால் செலுத்தப்பட்ட காசுக்கான சரியான இரட்டைப் பதிவாக அமைவது,

1. கடன் கொடுத்தோர் கணக்கு வரவு ரூ. 50 000
   காசுக் கணக்கு செலவு ரூ.50 000

2. கடன் கொடுத்தோர் கணக்கு வரவு **ரூ. 45** 000
   காசுக் கணக்கு செலவு ரூ. 45 000

3. கடன் கொடுத்தோர் கணக்கு வரவு **ரூ. 45** 000
   காசுக் கணக்கு செலவு **ரூ.** 42 750
   பெற்ற கழிவு கணக்கு செலவு **ரூ.** 2 250

Commerce and Business Studies Branch

4. கடன் கொடுத்தோர் கணக்கு வரவு **ரூ.** 50 000
காசுக் கணக்கு செலவு **ரூ.** 45 000
பெற்ற கழிவு கணக்கு செலவு **ரூ.** 5 000

(21) கசுனின் வணிகத்தில் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்களுக்கு அமைவான இரட்டைப் பதிவு கீழே தரப்பட்டுள்ளது.

1. கடன் கொடுத்தோர் கணக்கு வரவு **ரூ.** 50 000
காசுக் கணக்கு செலவு **ரூ.** 45 000
பெற்ற கழிவு கணக்கு செலவு **ரூ.** 5 000

மேலே உள்ள இரட்டைப் பதிவிற்கான கொடுக்கல் வாங்கலாக அமையக்கூடியது,

1. கடன் கொடுத்தோருக்கு ரூ. 45 000 காசாகவும் , ரூ. 5 000 காசுக்கழிவாகவும் வழங்கல்.
2. ரூ. 50 000 பெறுமதியான பொருட்களை கடனுக்கு வாங்கும் போது 10% சந்தைக் கழிவு பெறல்.
3. ரூ. 50 000 கடன் கொடுத்தோர் கணக்கை தீர்க்கும் போது ரூ. 5 000 காசுக் கழிவாக கிடைத்தல்.
4. ரூ. 45 000 கடன் கொடுத்தோருக்கு செலுத்துவதற்று பதிலாக தவறுதலாக ரூ. 50 000 செலுத்தல்.

(22) சமனின் வியாபாரத்தில் 2021 ஜனவரி மாதத்தில் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன. குறித்த கொடுக்கல் வாங்கல்களில் காசுக்கணக்கில் “வரவாக” “செலவாக” பதியப்படும் என்பதை பொருத்தமான நிரலில் (✓) அடையாளமிட்டுக் காட்டுக.

| | வரவு | செலவு |
|---|---|---|
| 1. சமனினால் மேலதிக மூலதனம் ஈடுபடுத்தப்பட்டது ரூ. 50 000 | | |
| 2. வங்கிக் கடன் மீளச் செலுத்தியது ரூ. 20 000 | | |
| 3. சரக்கு காசுக்கு கொள்வனவு ரூ. 1 000 | | |
| 4. கடன் பட்டோரிடமிருந்து கிடைத்த காசு ரூ. 30 000 | | |
| 5. இயந்திர கொள்வனவு ரூ. 85 000 | | |
| 6. கட்டிட வாடகை பெற்றது ரூ. 10 000 | | |
| 7. சமன் பற்று ரூ. 5 000 | | |
| 8. கடன் கொடுத்தோரான பியலுக்கு செலுத்தியது ரூ. 2 000 | | |
| 9. மின்சாரக் கட்டணம் செலுத்தியது ரூ. 1 500 | | |
| 10. பெற்ற வங்கிக் கடன் மீண்டும் பெறப்பட்டது ரூ. 50 000 | | |

Commerce and Business Studies Branch

(23) சாக்யா வணிகத்தின் 2021 தை மாதத்தில் நடைபெற்ற சில கொடுக்ககல் வாங்கல்கள் பின்வருமாறு.

| திகதி | வவுச்சர் இலக்கம் | கொடுக்ககல் வாங்கல்கள் |
|---|---|---|
| 2021.01.01 | 001 | ரூ. 50 000 க்கு சரக்கு கொள்வனவு |
| 2021.01.02 | 001 | ரூ. 25 000 க்கு சரக்கு காசுக்கு கொள்வனவு |
| 2021.01.05 | 002 | கடன் பட்டோரான சனுகவிடம் பெற்ற பணம் ரூ. 10 000 |
| 2021.01.07 | 003 | பெற்ற வட்டி ரூ. 2 000 பெறப்பட்டது |
| 2021.01.10 | 002 | இயந்திர திருத்தச் செலவு ரூ. 5 000 |
| 2021.01.12 | 003 | கடன் கொடுத்தோரான கசுனுக்கு செலுத்தியது ரூ. 10 000 |
| 2021.01.15 | 004 | சாக்யாவின் வீட்டு வாடகை செலுத்தியது ரூ. 2 500 |
| 2021.01.16 | 004 | வங்கி கடன் பெற்றது ரூ. 80 000 |
| 2021.01.08 | 005 | சாக்யாவின் மேலதிக மூலதனம் ரூ. 50 000 |
| 2021.01.25 | 005 | இயந்திர கொள்வனவு ரூ. 10 000 |

மேற்குறித்த கொடுக்ககல் வாங்கல்களை உரிய கணக்குகளில் பதிவு செய்து கணக்குகளை முடிவுறுத்திக் காட்டுக

(24) நெதுனியினுடைய வணிகத்தின்2021 தை மாதத்துக்கான கணக்கு மீதிகள் பின்வருமாறு.

காசு மீதி ரூ .4000 0

மூலதனமீதி ரூ .55000

<u>கடன் பட்டோர்</u>

குசல் ரூ .16000

மனிசா ரூ .2000 0

<u>கடன் கொடுத்தோர்</u>

அகித ரூ .18000

யொகான் ரூ .15000

தை மாதத்தினுள் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

2021.01.01 காசு விற்பனைக்கான காசோலை ரூ .3000 0 பெறப்பட்டது

2021.01.06 காசுக்கான கொள்வனவு ரூ .19000

2021.01.15 அகித வினுடைய கணக்கினை முடிக்கும் போது ரூ .3000 கழிவாகப் பெறப்பட்டது

2021.01.20 மனிசா விடம் உரிய பணம் பெறப்படும் போது 10% கழிவாக

Commerce and Business Studies Branch

அனுமதிக்கப்பட்டது

2021.01.24 குசலிடம் ரூ .5000 பெறப்பட்டதுடன் ரூ .1000 கழிவாக

அனுமதிக்கப்பட்டது

2021.01.26 யொகானுக்கு ரூ .1000 0 செலுத்தப்டும் போது 10% கழிவாக

பெறப்பட்டது

மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களை கழிவுகள் அடங்கிய காசேட்டில் பதிவு செயது ஊரிய நாளேடுகளில் பதிந்து முடித்துக் காட்டுக.

(25) வணிக்தில் மீண்டும் மீண்டும் தோன்றும் குறைவான செலவுகளைபதிவு செய்வதற்கான உரிய மூல ஆவணங்கள் மற்றும் கணக்குகளாவன,

(1) செலவு வவுச்சர் மற்றும் காசுக் கணக்கு

(2) காசு பற்றுப் சீட்டு மற்றும் காசுக் கணக்கு

(3) சிறு முதல் செலவு வவுச்சர் மற்றும் காசுக் கணக்கு

(4) நாளேடு வவுச்சர் மற்றும் காசுக் கணக்கு

(26) காலமுடிவில் செலவு செய்த காசு பொதுக் காசாளரிடம் சில்லறைக் காசாளருக்கு வழங்கப்படும் முறையானது அழைக்கப்படுவது

(1) சில்லறைகாசேடு நிதி பெறுதல் என்று

(2) சில்லறைகாசேடு நிதி செலவிடல் என்று

(3) சில்லறைகாசேடு மீள் நிரப்பீடு முறை என்று

(4) சில்லறைகாசேடு வகுத்தல் முறை என்று

(27) சில்லறைகாசேட்டில் பேரேட்டுக் கணக்குகளில் பதியப்படும் விடைகளை மட்டும் கொண்டமைந்த தொகுதி

(1) முத்திரைக் கட்டணம், படித உறைகள் காசுக்குக் கொள்வனவு, கடன்கொடுத்தோரன கலுமுக்கு செலுத்தியது

(2) போக்குவரத்துச் செலவு, ஏற்றல் இறக்கல் செலவு, குளிர் பானத்துக்கான செலவு

(3) கடன்கொடுத்தோரன கலுமுக்கு செலுத்தியது, பொருட்களைக் கொண்டுவரும் செலவு, கணணி Key board கொள்வனவு செலவு

(4)சுத்தப்படுத்தும் திரவம் கொள்வனவுச் செலவு, முச்சக்கர வண்டிச் செலவு, பஸ் கட்டணம்

Commerce and Business Studies Branch

(28) சில்லறைகாசேடு தொடர்பில் சரியான கூற்று

(1) சில்லறைகாசேட்டில் வரவு மற்றும் செலவு என்று இரண்டு பக்கங்கள் இல்லை

(2) காசுக் கணக்கினைப் போன்று சில்லறைகாசேட்டிலும் இரட்டைப் பதிவுகள் மேற்கொள்ளப்படும்

(3)செலவுக் கணக்குகள் தொடர்பாக இரட்டைப் பதிவுவிதிகளுக்கு அமைவாக சில்லறைகாசேட்டிலும் பதிவுகள் மேற்கெள்ளப்படும்

(4) சில்லறைகாசேட்டுக்கு பொறுப்பான நபர் நிதியினைப் பெறும் போது காசேட்டில் வரவும் சில்லறைகாசேட்டில் செலவும் வைக்கப்படும்

பின்வரும் தரவுகளின் அடிப்படையில் 30- 35 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும். வரையறுக்கப்பட்ட பலே நிறுவனமானது சில்லறைச் செலவுகளுக்காக சில்லறைகாசேட்டினைப் பராமரிக்கின்றனர்.

| | |
|---|---|
| 2021.01.01 மீதி | ரூ 400 . |
| 2021.01.01 செலவுகள் மீளளிப்பு | ரூ 2600 |
| 2021.01.31 கையிலுள்ள மீதி | ரூ 500 |

(29) பலே நிறுவனமானத்தினது சில்லறைகாசேட்டின் மீளளிப்பு தொகையின் பெறுமதி யாது ?

(1) ரூ 2600 (2) ரூ 3000

(3) ரூ 3100 (4) ரூ 3500

(30) பலே நிறுவனமானத்தினது தை மாதத்துக்கான சில்லறைச் செலவு யாது ?

(1) ரூ 2200 (2) ரூ 2500

(3) ரூ 2600 (4) ரூ 3500

(31) 2021.01.30 அன்று பிரதம காசாளரினால் சில்லறைகாசேட்டின் மீளளிப்பு தொகையாக வழங்கப்படவேண்டிய பெறுமதி யாது ?

(1) ரூ 2100 (2) ரூ 2200

(3) ரூ 2500 (4) ரூ 2600

(32) பலே நிறுவனமானத்தினது மாசி மாதத்திலிருந்து சில்லறைகாசேட்டின் மீளளிப்பு தொகையினை மேலும் ரூ 500 இனால் அதிகரிக்கத் திட்டமிட்டால் மீளளிப்பு தொகையாக வழங்கப்படவேண்டிய பெறுமதி யாது ?

(1) ரூ 2000 (2) ரூ 2500

(3) ரூ 3000 (4) ரூ 3500

Commerce and Business Studies Branch

(33) சிதுமி வணிகத்தினுடைய சில்லறைகாசேடு தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

- சில்லறைகாசேட்டின் மீளளிப்பு தொகை ரூ 3000 என்பதுடன் ஒவ்வொரு மாத இறுதியிலும் மீளளிப்பு செய்யப்பட வேண்டும்
- 2021.10.01 ஆம் திகதி மீதி ரூ 800

ஒக்ரோபர் மாதத்துக்கான சில்லறைச் செலவுகள் பின்வருமாறு

10/1 செலவுகள் மீளளிக்கப்பட்டது

10/2 எழுதுகருவிகள் கொள்வனவு ரூ 80

10/5 முச்சக்கர வண்டி கட்டணம் ரூ 150

10/7 பேனை பென்சில்கள் கொள்வனவு ரூ 100

10/10 சுனிலுக்குச் செலுத்தியது ரூ 500

10/12 போக்குவரத்துச் செலவு செலுத்தியது ரூ 75

10/15 பொருட்கள் கொண்டுவரும் செலவு ரூ 200

10/20 காகிதாகி கொள்வனவு ரூ 400

10/25 உபசாரச் செலவு ரூ 350

10/28 பஸ் கட்டணம் ரூ 150

10/30 உபகரண கொள்வனவு ரூ 600

10/31 செலவுகள் மீளளிக்கப்பட்டது

எழுது கருவி, பொக்குவரத்து, ஏனைய மற்றும் பேரேட்டுக்கணக்குகள் என்பவற்றினை உள்ளடக்கிய சில்லறைக் காசேட்டினைத் தயாரிக்கவும்

Commerce and Business Studies Branch